தினமணி
ஞாயிற்றுக்கிழமை, 1 ஏப்ரல் 2018

# பயிற்சி நிறைவு விழா...




துடியலூர் அருகே வட்டமலைப்பாளையத்தில் உள்ள ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற இலவச தொழிற்பயிற்சி நிறைவு விழாவில் மாணவருக்கு சான்றிதழ் வழங்குகிறார் மகேந்திரா பிரைடு பள்ளியின் தேசிய இயக்குநர் பத்மா ஜெயராமன். உடன், கல்லூரி முதல்வர் பி.எல்.சிவகுமார் உள்ளிட்டோர்.

மக்கள் குரல்
நடுநிலை நாளேடு
01.04.2018




# ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் ஆட்டோ மொபைல் டெக்னாலஜி பயிற்சி

## 550 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்

கோவை, ஏப். 1–

ஸ்ரீ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில், ஆட்டோ மொபைல் டெக்னாலஜி பயிற்சி முடித்த, 550 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் சென்னை மஹிந்தரா ப்ரைடு பள்ளி இணைந்து நடத்திய, ஆட்டோ மொபைல் டெக்னாலஜி குறித்தான இலவச பயற்சியின் நிறைவு விழாவையொட்டி, சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி, கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

முதல்வர் சிவக்குமார் வரவேற்று பேசினார். மஹிந்தரா ப்ரைடு பள்ளி இயக்குநர் பத்மா ஜெயராமன் கலந்து கொண்டு, ஒரு வாரகால சிறப்பு பயிற்சியினை முடித்த, பிஎஸ்ஜி பாலிடெக்னிக் கல்லூரி, அரசினர் ஆண்கள் பாலிடெக்னிக் கல்லூரி, பி.ஏ.ராமசாமி ராஜா கல்லூரி, ஜிஆர்ஜி மற்றும் நஞ்சைய லிங்கம்மாள் ஆகிய கல்லூரிகளின், 550 மாணவ, மாணவிகளுக்கு, சான்றிதழ்களை வழங்கி, பாராட்டி பேசினார்.

விழாவில், முதல்வர்கள் கிரிராஜன், சங்கர சுப்ரமணியம் ஆகியோர் வாழ்த்தி பேசினார். இறுதியாக, மஹிந்தரா ப்ரைடு பள்ளி சென்னை மாநில நிர்வாகி ஆனந்தி நன்றி கூறினார்.

தினமலர்
04.04.2018

# கல்வி செய்தி

## சான்றிதழ் வழங்கும் விழா

வட்டமலைபாளையம் ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரி, சென்னை மகேந்திரா பிரைடு ஸ்கூலுடன் இணைந்து, ஆட்டோ மொபைல் குறித்த பயிற்சி முகாம் நடத்தியது. பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் விழா நடந்தது.

பயிற்சி முடித்த பி.எஸ்.ஜி., பாலிடெக்னிக், அரசினர் ஆண்கள் பாலிடெக்னிக், ராஜபாளையம் ராமசாமி ராஜா பாலிடெக்னிக், கோவை ஜி.ஆர்.ஜி., பாலிடெக்னிக், மேட்டுப்பாளையம் நஞ்சையா லிங்கம்மாள் பாலிடெக்னிக் மாணவ, மாணவியர், 550 பேருக்கு கல்லூரி முதல்வர் சிவக்குமார், மகேந்திரா பிரைடு ஸ்கூல் இயக்குனர் பத்மா, சான்றிதழ் வழங்கினர்.

அரசினர் பாலிடெக்னிக் முதல்வர் வைரம், பி.எஸ்.ஜி., பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் கிரிராஜன், ஜி.ஆர்.ஜி., பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் சங்கர சுப்பிரமணியம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




■ ராமகிருஷ்ணா பாலிடெக்னிக் கல்லூரியில் சான்றிதழ் வழங்கும் விழா நடந்தது.